# 5 "சூட்டு இருக்கை"

**இலக்கு**

*மாணவர்கள் வாய்மொழிச் சொற்களை விவரிக்கும்போதும் உய்த்துணரும் போதும், தம் பெறுநிலை மற்றும் ஆக்கநிலை சொற்களஞ்சியத்தை வளர்த்துக்கொள்வார்கள். அதே வேளை, தம்முடைய முதல் மொழியில் வாக்கிய அமைப்புகளில் உள்ள தம் திறமையினை விரிவாக்கிப் பயிற்சியும் செய்வார்கள்.*

தரம் 3 - 6

10 - 20 மணித்துளிகள்

- **நடைமுறை:**
- ஆசிரியர் வகுப்பை இரண்டு சம வலுவுள்ள குழுக்களாகப் பிரிக்கின்றார் (அ மற்றும் ஆ). அவர் முதலில் இருவரைத் தேர்வுசெய்து "சூட்டு இருக்கைகளில்" அமரச் செய்வார். இதற்காகவே எழுதுபலகைக்கு முன், வகுப்பைப் பார்க்கக் கூடியதாய் இரு கதிரைகள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு மாணவன் / மாணவி குழு அ வின் சார்பாகவும் மற்றவர் குழு ஆ வின் சார்பாகவும் பங்கேற்பார்.
- ஆசிரியர் கரும்பலகையில் ஒரு சொல் எழுதுவார் (எ.கா. "குதப்பி", "எங்கள் நாட்டின் தலை நகரம்","ஊர்தல்",). எழுதப்படும் அச்சொல் எல்லோருக்கும் தெரிந்த சொல்லாக இருக்கவேண்டும். "சூட்டு இருக்கைகளில்" இருப்பவர்கள் வகுப்பை நோக்கி இருப்பதால் அவர்களுக்கு எழுதப்பட்ட சொல் எது எனத் தெரியாது.
- ஆசிரியர் ஒப்புதல் கொடுத்தவுடன், இரு குழுவினரும் அச்சொல்லை விளக்கத்தொடங்குவர். எக்காரணம் கொண்டும் அந்த சொல்லையோ, அதன் அடிச் சொல்லையோ மாணவர்கள் கூறக்கூடாது. விதிகளை ஒரு குழு மீறினால் அக்குழு விளையாட்டை விட்டு நீங்கும் (எ.கா.:"சூட்டு இருக்கையில்" உள்ளவருக்கு சொல்லைத் தாழ்குரலில் சொல்வது). தம்முடைய குழுவினர் வழங்கும் குறிப்புகளை அடிப்படையாக வைத்து, "சூட்டு இருக்கையில்" உள்ளோர் சொல்லை உய்த்துணர முயற்சிக்க வேண்டும்.
- "சூட்டு இருக்கைகளில்" உள்ள மாணவர்களில் ஒருவர் எழுதுபலகையில் உள்ள சொல்லைச் சரியாகச் சொன்னவுடன் அவரது குழுவினர் விளையாட்டை வென்றவராவார்.
- "சூட்டு இருக்கையில்" உள்ள மாணவர்களையும் மாற்றி, எழுதுபலகைச் சொல்லையும் மாற்றி விளையாட்டைத் தொடரலாம்.
- **மாற்றுவழி:**
- சொற்கள் வேண்டுமென்றே **பா.மொ.க** அல்லது தற்காலத் தலைப்புகள் தொடர்பாகவே தெரியப்படுகின்றன. இந்த வகையில், (எ.கா.: தாய்நாட்டின் நீர்வளம், வரலாற்று சிறப்பு மிக்கவர்). இவ் விளையாட்டு ஒரு புதிய தலைப்பின் அறிமுகத்துக்கும் பயன்படுத்தலாம்இது இளைய மாணவர்களுக்குக் கடினமாயிருப்பின், இதனை உயர்நிலை மாணவருக்கும் இதன் எளிமையான வடிவத்தை இளையவர்க்கும் நடைமுறைப்படுத்தலாம்.
- மாணவர்கள் தானாக அல்லது ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு தலைப்புடன் தொடர்பான சொற்களைத் தேர்ந்தெடுப்பர். ஆசிரியர் மாணவர்களின் தெரிவிலிருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுப்பார்.